# ஹிந்தி கட்டாய பாடம்.

## பயனற்றது; தீமைபயக்கக் கூடியது.

### தற்கால முக்கிய பிரச்சினை ஹிந்திப் பயிற்சியல்ல.

## நவ இந்தியாவை உருப்படுத்தும் உத்தம கல்வித்திட்டமே.

### காங்கரஸ் மந்திரிகள் அவசரப்படக்கூடாது.

### நிபுணர்கள் அபிப்பிராயம் அறியவேண்டும்.

### டாக்டர் நாயுடு எச்சரிக்கை.

(○)

சென்னை, அக். 1.

**டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு எழுதுகிறார்.**

தென்னிந்தியப் பள்ளிக்கூடங்களில் ஹிந்தியைக் கட்டாய பாடம் ஆக்குவது சம்பந்தமான தகராறில் படிப்பாளிகளான தமிழர்கள் பலர் கவனம் பதிந்திருப்பது முக்கியமாகக் கவனிக்கத் தக்கது.

*தென்னாட்டுக்கு ஹிந்திப் பயிற்சி அநாவசியமட்டுமன்றி தீமை பயக்கக்கூடியதென நான் வெகு காலத்துக்கு முன்னமேயே முடிவு செய்திருக்கிறேன்.*

**தென்னாட்டுக் காங்கரஸ் தலைவராக நான் இருந்துவந்த காலத்து தென்னாட்டில் ஹிந்தியைப் புகுத்துவதை நான் தடுத்து வந்தேன்.**

இப்பொழுது காங்கரஸ் மந்திரிகள் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் தென்னாட்டில் ஹிந்தியைப் புகுத்துவதல்ல; புகழும் பெருமையும் வாய்ந்த எதிர்கால இந்தியாவை உருப்படுத்துவதற்கு அநுகுணமான ஒரு கல்வித் திட்டம் வகுப்பதே காங்கரஸ் மந்திரிகள் இப்பொழுது முக்கியமாக கவனிக்க வேண்டிய வேலை.

**ஆனால் மாகாண பாஷை மூலம் கல்வி புகட்டினால்தான் அத்தகைய ஒரு திட்டத்தை வகுக்க முடியும். தற்காலக் கல்வி முறையைப்பற்றி இந்தியாவிலும் பிரிட்டனிலும் மிக்க அதிருப்தி இருந்து வருகிறது.**

எனவே ஆவேச உணர்ச்சியினால் அவசரப்பட்டு எதுவும் செய்து விடக்கூடாது.

*சத்திய ஆராய்ச்சிகள் நாம்எவ்வளவோ செய்து பலன் கண்டாய்விட்டது. கல்வி விஷயத்தில் தமது குழந்தைகள் மீது காங்கரஸ் மந்திரிகள் ஆராய்ச்சி நடத்துவதை தென்னாட்டுப் பெற்றோர்கள் பார்த்துக்கொண்டு இருக்கக் கூடாது.*

**மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார், டாக்டர் அருண்டேல், டாக்டர் சி. ஆர். ரெட்டிபோன்ற எத்தனையோ தேசபக்தியுடைய கல்வி நிபுணர்கள் இருக்கிறார்கள்.**

*கல்வி விஷயத்தில் அவர்களுக்குள்ள அறிவையும் அனுபவத்தையும் எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.*

ஆகவே இந்தப் பிரச்சினையில் அவர்களுடைய அபிப்பிராயத்தையும் அறிய வேண்டுமென்று நான் காங்கிரஸ் மந்திரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

*மேலும் ஹிந்திப்பயிற்சி விஷயத்தில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் தகராறுக்கு இடமில்லையென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்மொழியையும் தமிழ்க்கலைகளையும் பார்ப்பனர்கள் எவ்வளவோ விருத்தி செய்திருப்பதுமன்றி தம் சொந்த பாஷையைவிட்டு விட்டு தமிழைத் தாய்மொழியாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.*

**எனவே ஹிந்திப்பிரச்சினையை வகுப்பு, ஜாதி, மத உணர்ச்சியுடன் பரிசீலனை செய்யலாகாதென்று நான் வற்புறுத்துகிறேன்.**